கூடுதல் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் மற்றும்
கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி,
முன்னிலை. திருமதி. என்.மாரீஸ்வரி எம்.ஏ,எம்.எல்,
முதன்மை சார்பு நீதிபதி,
கூடுதல் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயர்
மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,(பொறுப்பு)
2023-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 07- ம் நாள் சனிக்கிழமை

எம்.சி.ஓ.பி.எண்.254/2019

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை தாலுகா, அச்சன்புதூர் சத்யா நகர், மெயின்ரோடு கதவுஎண். 12/4/21 விலாசத்தில் வசித்து வரும் சாகுல்கமீது குமாரர் 16 வயதுள்ள அப்துல் ரஹ்மான்.

(மேற்படியாருக்கு தகப்பனாரும், பாதுகாவலுருமான
சாகுல்கமீது மூலம்)

..மனுதாரர்

/எதிர்/

1.திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை தாலுகா, வாவா நகரம், மேலத்தெரு கதவுஎண். 3/சி31 விலாசத்தில் வசித்துவரும் முகம்மது துரை குமாரர் முகம்மது மன்சூர்.

2.திருநெல்வேலி மாவட்டம், தேன்பத்து, 106/ஏ/1420 பள்ளிவாசல் தெரு விலாசத்தில் வசித்துவரும் காதர் மைதீன் குமாரர் ரசாக் மைதீன்

3.லிபர்ட்டி ஜெனரல் இன்சுரன்ஸ் கம்பெனி லிமிடெட், நம்பர் 88.ஜி.என். செட்டி ரோடு, ஹிந்தி பர்சார் சபா, சென்னை 17.

.. எதிர்மனுதாரர்கள்.

மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 140, 166ன் கீழ் இழப்பீடாக ரூ.500,000/ம் கோரி இம்மனு 08.07.2019- -ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவானது 27.09.2023- அன்று என்முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தப்போது மனுதாரர் தரப்பில் திரு.எஸ்.தினேஸ் வழக்கறிஞரும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.எம். முகம்மது காலித் வழக்கறிஞரும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு. ஆ. நாகராஜன் வழக்கறிஞரும் முன்னிலையாகியும், 1,2,3-எதிர்மனுதாரர்கள் அழைத்தும் வருகையில்லாததால் அவரை ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், 2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாத நிலையிலும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை எனது பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>உத்தரவு</u>

மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 140, 166ன் கீழ் இழப்பீடாக ரூ.5,00,000/-ம் கோரி இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்.</u>

மைனர் மனுதாரர் 10.06.2019 அன்று மாலை 04.45 மணி அளவில் அச்சன்புதுார் சத்யா நகர் பாத்திமா என்பவரின் வீட்டின் பக்கம் கிழக்கில் இருந்து மேற்காக சாலையில் கவனமாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, 2ம் எதிமனுதாரருக்குப் பாத்தியப்பட்ட டி.என். 72.ஏஏ.9309-என்ற அல்டோ காரை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து மனுதாரரின் பின்னால் மோதியதில் மனுதாரருக்கு முதுகில் வெட்டுக் காயமும், தலை மற்றும் கண்ணில் வெட்டுக்காயமும் ஏற்பட்டு உடனடியாக மனுதாரை தென்காசி அரசு மருத்துவனைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னிட்டு காயத்தின் தன்மை கருதி திருநெல்வேலியில் உள்ள தலைமை அரசு மருத்துவமனைக்கும் கொண்டு செல்லப்பட்டு, சிகிச்சை செய்யப்பட்டு உயிர்பிழைத்தார். மேற்படி விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் நடைபெற்றதாக தெரிவித்து 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக கடையநல்லூர் காவல்நிலைய குற்ற எண். 173/2019, இதச 279,337- பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி வழக்கு

நிலுவையில் இருந்து வருகிறது. விபத்தின் காரணமாக மனுதாரரால் முன்புபோல் ஓடியாடி விளையாட முடியவில்லை. படிப்பில் நாட்டம் செலுத்தமுடியவில்லை. எனவே, மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிர்மனுதாரர்களிடமிருந்து ரூ.5,00,000/-ம் இழப்பீடு கோரி மனுதாரரால் இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.

மனு நிலைக்கத்தக்கது அல்ல. மனுதாரர் கூறுவதுபோன்று விபத்து நடைபெறவில்லை. உண்மையில், 2ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட அல்டோ காரை 1ம் எதிர்மனுதாரர் மெதுவாகவும், சாலைவிதிகளை அனுசரித்தும் ஓட்டி சென்று கொண்டிருந்தபோது சாலையில் சென்று கொண்டிருந்த மைனர் மனுதாரரின் பின்னால் கார் வருவதை கவனிக்காமல் திடீரென சாலையை கடப்பதற்காக குறுக்காக ஓட்டிவந்து 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிச் சென்ற காரின் மீது மோதி, அதன் காரணமாக மனுதாரருக்கு காயங்கள் ஏற்பட்டது. அதன் காரணமாக 1ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது. 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தை 3ம்எதிர்மனுதாரரிடம் விபத்து சமயத்தில் காப்பீடு செய்துள்ளார். பல்வேறு தலைப்புகளின் கீழ் மனுதாரர் கோரியிருக்கும் இழப்பீடு அதிகமானது. எனவே, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர் தரப்பில் ம.சா.1- விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1. முதல் 9 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5 .இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் பின்வருமாறு

| | |
|---|---|
| 1. | விபத்தானது யாருடைய அதிவேகம் மற்றும் கவனக் குறைவால் நடைபெற்றுள்ளது.? |
| 2. | மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கதா? கிடைக்கத்தக்கதெனில் எவ்வளவு? |

| 3. | மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையை யார் செலுத்தக் கடமைப்பட்டவர்கள்? |
|---|---|

6.பிரச்சனை 1-க்கான தீர்வு .

மனுதாரரின் மனுவானது, மனுதாரர் சம்பவதினம் அச்சன்புதுார் சத்யா நகர் அருகே சாலையில் கிழக்கில் இருந்து மேற்காக கவனமாக நடந்து சென்று கொண்டிருந்தபோது 2ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட மாருதி காரை அதன் ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து மனுதாரர் மீது மோதியதில் மனுதாரருக்கு இடதுகண்ணுக்கு மேல் வெட்டுக்காயமும், முதுகில் வெட்டுக் காயமும் மற்றும் உடம்பில் ஊமைக் காயங்களும் ஏற்பட்டதாகவும், மேற்படி காயங்களுக்கு எதிர்மனுதாரர்களிடமிருந்து இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

7. 2,3 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மை காரணமாக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில், 2ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட அல்டோ காரை 1ம் எதிர்மனுதாரர் மெதுவாகவும், சாலைவிதிகளை அனுசரித்தும் ஓட்டி சென்று கொண்டிருந்தபோது சாலையில் சென்று கொண்டிருந்த மைனர் மனுதாரரின் பின்னால் கார்வருவதை கவனிக்காமல் திடீரென சாலையை கடப்பதற்காக குறுக்காக ஓட்டிவந்து 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிச் சென்ற காரின் மீது மோதி அதன் காரணமாக மனுதாரருக்கு காயங்கள் ஏற்பட்டதாகவும், 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளதாகவும், 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தை 3ம்எதிர்மனுதாரரிடம் விபத்து சமயத்தில் காப்பீடு செய்துள்ளதால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. இந்நிலையில், விபத்தில் காயம் அடைந்த மனுதாரர், இளவர் என்பதால் இளவர்

மனுதாரருக்காக அவருடைய தகப்பனார் ம.சா.1. ஆக சாட்சியம் அளித்து மசா.ஆ.1. முதல் 9 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ள சங்கதிகளையே உறுதிக்கூற்றிலும் கூறி சாட்சியம் அளித்துள்ளார். ம.சா.ஆ.1. ஆக முதல் தகவல் அறிக்கை குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனை பரிசீலனை செய்கையில், விபத்தானது, 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் நடைபெற்றுள்ளதாக தெரிவித்து, 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது காணமுடிகிறது. ம.சா.ஆ.3 ஆக விபத்தில் ஈடுபட்ட டி.என். 76.ஏ.எ9309- வாகனத்தின் பதிவுச்சான்று நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனை பரிசீலனை செய்கையில் மேற்படி மாருதி கார் 2ம் எதிர்மனுதாரருக்கு உரிமையானது என்பது காணமுடிகிறது. விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு காரணமாக நடைபெறவில்லை மனுதாரரின் கவனக்குறைவு காரணமாக நடைபெற்றுள்ளதாக 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட போதிலும், அதனை நிருபணம் செய்வதற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் விபத்து சம்பந்தமாக போதுமான சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படாத நிலையிலும், 2,3 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் வருகையில்லாததால் அவர்களை ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும், ம.சா.1. சாட்சியத்தின் அடிப்படையிலும், விபத்தானது, 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் நடைபெற்றுள்ளதாக பிரச்சனை 1க்கு தீர்வு காணப்படுகிறது.

9. பிரச்சனை 2 -க்கான தீர்வு

விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதை காரணமாக நடைபெற்றுள்ளது என தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரருக்கு கிடைக்ககூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு என கணக்கிட வேண்டியது அவசியமாக உள்ளது. இந்நிலையில் ம.சா.ஆ.5 மருத்துவ ஆவணத்தின் அடிப்படையில் மனுதாரருக்கு தலையில் காயங்கள் ஏற்பட்டுள்ளதாக

குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரருக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்காக எடுக்கப்பட்ட ஸ்கேன் அறிக்கையான ம.சா.ஆ.8 ஐ பரிசீலனை செய்கையில், விபத்தின் காரணமாக மனுதாரருக்கு தலையில் யாதொரு குறைபாடும் இல்லை என்றும், மனுதாரரின் தலையில் செயல்பாடுகள் சம விகிதத்தில் ( Normal ) ஆக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மனுதாரருக்கு விபத்தின் காரணமாக வேறு குறைபாடுகள் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை. இந்நிலையில் விபத்து சமயத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தை தெளிவுப்படுத்தும் பொருட்டு எடுக்கப்பட்ட புகைப்படம் ம.சா.ஆ. 7ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், விபத்தின் காரணமாக மனுதாரருக்கு இடதுகண்ணின் இடது பக்கம் காயங்கள் ஏற்பட்டு அதன் காரணமாக தையல்கள் போடப்பட்டுள்ளதும், முதுகிலும்,கன்னத்திலும், தலையிலும் வெட்டுக் காயங்கள் மட்டுமே உள்ளது தெளிவாகின்ற நிலையில், மனுதாரருக்கு விபத்தின் காரணமாக எலும்பு முறிவுக் காயங்கள் எதுவும் ஏற்படாத நிலையில், மனுதாரருக்கு ஏற்பட்ட காயமானது, சாதாரணக் காயம் என இந்நீதிமன்றம் முடிவு செய்து சாதாரணக் காயங்களின் அடிப்படையில் ரூ.25,000/-ம் வழங்கப்படுகிறது. மேலும், விபத்தின் காரணமாக மனுதாரருக்கு கண், முதுகு தலை ஆகிய இடங்களில் வெட்டுக்காயம் ஏற்பட்டு அதன் காரணமாக வலியும் வேதனையும்அதிகம் இருக்கும் என்பதை கருத்தில் கொண்டும், மனுதாரர் இளவர் என்பதை கருத்தில் கொண்டும், வலி மற்றும் வேதனை என்ற தலைப்பின் கீழ் ரூ.50,000/-ம், கிடைக்கத்தக்கது எனவும், ம.சா.ஆ.9 பில்படி மனுதாரர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டுள்ளதால் ம.சா.ஆ.9 பில் படி ரூ. 3333/- கிடைக்கத்தக்கது எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரருக்கு கிடைக்ககூடிய இழப்பீட்டுத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| காயத்திற்கு | ரூ. | 25,000/- |
| வலி மற்றும் வேதனைக்கு | ரூ. | 50,000/- |

| | |
|---|---|
| ம.சா.ஆ.9 பில்படி | ரூ. 3,333/- |
| ஆகமொத்தம் | ரூ. 78,333/- |

10.பிரச்சனை 3க்கான தீர்வு.

விபத்தானது, 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு காரணமாக நடைபெற்றுள்ளதாலும், வாகனத்தின் உரிமையாளர் 2ம் எதிர்மனுதாரர் என்ற நிலையில் 2ம்எதிர்மனுதாரர் தன்னுடைய வாகனத்தை ம.சா.ஆ. 4 ஆவணத்தின் அடிப்படையில் 3ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்து மேற்படி காப்பீடு விபத்து சமயத்தில் ஊர்ஜிதத்தில் உள்ளதாலும், மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்பீட்டை காப்பீட்டுக் கழகமான 3ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டுமெனவும், பிரச்சனை 3 க்கு தீர்வு காணப்படுகிறது.

11. முடிவில் மனுதாரருக்கு, 3ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகையாக ரூ.78,333/-ஐ செலுத்த வேண்டுமென்றும், அதற்கு மனுத் தேதிமுதல் தொகை வைப்பீடு செய்யும் நாள்வரை 7.5% வட்டியும் மனுச் செலவுத்தொகையும் செலுத்த வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகையை 3ம் எதிர்மனுதாரர் உத்தரவு தேதியில் இருந்து இரண்டு மாத காலத்திற்குள் இந்த தீர்ப்பாயத்தின் தென்காசி இந்தியன் வங்கிக் கிளை கணக்கு எண். 6456273001-ல் ஐ.எப்.சி. கோடு எண். IDIB000T009 –க்கு -இ- மாறுதல் மூலம் வைப்பீடு செய்துவிட்டு அந்த தகவலை இந்த தீர்ப்பாயத்திற்கு தெரிவிக்க வேண்டுமென்றும், மனுதாரர் இளவர் என்பதால் மேற்படியாருக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை 3 ஆண்டுகள் அல்லது அவருக்கு 18வயது நிறைவடையும்வரை இவற்றில் எந்தக் காலக்கெடு அதிகமோ அந்தக் காலக்கெடுவரை ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் மறு முதலீட்டுத்திட்டத்தின் கீழ் வைப்பீடாக செலுத்திவைக்கப்படும் என்றும், மனுதாரருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத்தொகைக்குரிய வட்டியும், மனுச் செலவையும், மனுதாரரின் பாதுகாவலரான தகப்பனார் உடனடியாகப் பெற்றுக் கொள்ளலாம் என்றும், வழங்கப்பட்ட

இழப்பீட்டுத் தொகைக்குரிய முத்திரைக் கட்டணத்தை உத்தரவு தேதியில் இருந்து 10-தினங்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும், வழக்கறிஞரின் ஊதியம் ரூ.4270/-எனவும் நிர்ணயம் செய்து உத்தரவிடப்படுகிறது.

As per the Judgment of the Honourable High Court in Tr.Cmp Nos.264 to 281 of 2020 M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd Versus Ayyanar and others, dated 11.05.2020. No separate decree passed.

Cost

| | |
|---|---|
| 1.Vakalath | Rs. 10.00 |
| 2.Stamp on the petition | Rs. 10.00. |
| 3.Batta Memo | Rs. 49.00 |
| | ------------ |
| | Rs. 69.00 |
| | ------------ |

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 07-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

N MAREESWARI Digitally signed by N MAREESWARI

கூடுதல் சார்பு நீதிபதி
தென்காசி.(பொறுப்பு)

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.</u>

| | | |
|---|---|---|
| 1. | 11.06.2016 | அச்சன்புதூர் காவல்நிலைய குற்ற எண். 173/2019முதல் தகவல் அறிக்கை நகல். |
| 2. | -- | டிஸ்சார்ஜ் சம்மரி நகல். |
| 3. | -- | டி.என்.72.ஏஏ.9309- வாகனத்தின் பதிவுச்சான்று நகல் |
| 4. | -- | டி.என்.72.ஏஏ.9309- வாகனத்தின் பாலிசி நகல். |
| 5. | -- | மருத்துவ சீட்டுகள். |
| 6. | -- | கார் சேதம் அடைந்ததற்கான போட்டோ மற்றும் சி.டி. |

| | | |
|---|---|---|
| 7 | -- | மனுதாரரின் புகைப்படம் மற்றும் சி.டி. |
| 8 | -- | ஸ்கேன் ரிப்போர்ட். |
| 9 | -- | ரூ. 3333/-க்கான பில். |

<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>

1.திரு.சாகுல்கமீது

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>- இல்லை.

N MAREESWARI Digitally signed by N MAREESWARI

**கூ.சா. நீ.**

தென்காசி.(பொறுப்பு)

17.10.2023

நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ. 258/-

11.10.2023-ல் செலுத்தப்பட்டுள்ளது.

N MAREESWARI Digitally signed by N MAREESWARI

**கூ.சா.நீ.**

தென்காசி(பொறுப்பு)

கூ.சா.நீ. தென்காசி.

எம்.சி.ஓ.பி.எண்.254/2019

உத்தரவு வரைவு/நேரிய

நாள்.07.10..2023.